Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் இந்தியா — இலங்கை | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 1-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி சித்திரை 15 ஆம் நாள் துல்ஹஜ் 14 (27-4-64 திங்கட்கிழமை இதழ் 76

# பிரதமருக்கு எஸ். ஜே. வி. கடிதம்

## 'பண்டாரநாயக்காவின் உறுதி காப்பாற்றப்படவில்லை'

### மன்னார் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானம்

மன்னார், ஞாயிறு

1956-ம் வருடத்துக்கு முன் அரசாங்க சேவையில் சேர்ந்தவர்கள் சிங்களச் சட்டத்தினால் பாதிக்கப்படமாட்டார்களென திரு. பண்டாரநாயகா அளித்திருந்த வாக்குறுதிக்கு முரணாக சிறிமா அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தமிழர்களைப் பாதிக்கும் வகையில் சிறிமா தலைமையில் இயங்கும் அரசாங்கம் பலவித நடவடிக்கைகள் எடுத்துவருவதால் பிரதமர் சிறிமா தமிழர்களின் ஆதரவை இழந்துவருவதாகவும் தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பிரதமருக்கு கடிதமொன்றை அனுப்பவிருக்கிறார்.

மலைநாட்டுப் பாடசாலை மாணவர்கள் விஷயத்தில் காட்டப்படும் பாரபட்ச நடவடிக்கை பற்றியும் இக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இன்று மன்னார் நகர மண்டபத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் காரியக் கமிட்டி கூட்டத்தில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பிரதமருக்கு அனுப்பவிருக்கும் மேற்படி கடிதம்பற்றி ஆலோசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

தமிழர்களைப் பாதிக்கும் மற்ற விஷயங்கள்பற்றியும் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

கூட்டத்துக்கு தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், மன்னார் எம். பி. திரு. வி. ஏ. அழகக்கோன், மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராஜதுரை, வட்டுக்கோட்டை எம். பி. திரு ஏ. அமிர்தலிங்கம், நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், தீவுப்பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினம், திருக்கோணமலை எம். பி. திரு. மாணிக்கராசா, பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினம், கிளிநொச்சி எம். பி. திரு. சிவசுந்தரம், வவுனியா எம். பி. தா. சிவசிதம்பரம், மூதூர் எம். பி. ஜனாப். முகமதலி ஆகிய எம். பி.க்களும் மற்றும் தமிழரசுக் கட்சிப் பிரமுகர்களும் சமுகமளித்தனர்.

—

கொழும்பு, ஞாயிறு

கடிதங்கள் பிரிக்கும் உத்தியோகத்தர்களின் தாமதவேலை நிறுத்தத்தால் கொழும்பில் தபால் விநியோகம் தாமதிக்கப்பட்டுள்ளது.

## மண்சரிவுக்கு 300 பேர் பலி!

றியோடிஜெனிரோ, ஏப்ரல் 26

கிழக்கு பிரேஸிலில் கிராமம் ஒன்றில் மண்சரிவு ஏற்பட்டதால் 300 பேர் பலியாகியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. இடிபாடுகளிலிருந்து இதுவரை 10 சடலங்கள் மீட்கப்பட்டதாயும் ராணுவமும், சடற்படையும் மீட்பு வேலைகளில் ஈடுபட்டிருப்பதாயும் அறிவிக்கப்பட்டது. பெருமழை காரணமாக மண்சரிவு ஏற்பட்டது.

பிரேஸில் தென்னமெரிக்காவிலுள்ள பெரியநாடாகும்.

## துங்கு மீண்டும் பிரதமரானார்

கோலாலம்பூர், ஏப். 26

மலேசிய பொதுத் தேர்தலில் துங்கு அப்துல் ரஹ்மானின் ஆளும் கட்சியான அலயன்ஸ் மாபெரும் வெற்றியீட்டியுள்ளதாகவும் துங்கு அப்துல் ரஹ்மான் மீண்டும் மலேசிய பிரதமர் பதவியைப் பெற்றுள்ளாரென்றும் கடைசியாகக் கிடைத்த செய்தியொன்று தெரிவித்துள்ளது. மொத்தம் 159 ஸ்தானங்களில் துங்குவின் கட்சி 125 ஸ்தானங்களில் வெற்றி பெற்றது.

## எண்ணெய்த் தொழிலாளர் வேலை நிறுத்தம்?

கொழும்பு, ஞாயிறு

லங்கா பெட்ரோலியம் தொழிலாளர் யூனியன் அங்கத்தவர்கள் தங்கள் கோரிக்கை நிறைவேறறப்படாவிடில் நாளை திங்கட்கிழமை முதல் இலங்கை முழுவதுமான வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானித்துள்ளார்கள்.

950 அங்கத்தவர்களைக் கொண்ட லங்கா பெட்ரோலியம் தொழிலாளர் யூனியன் நேற்றுப் பகல் 12-30 முதல் வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளது.

எங்கள் கோரிக்கைக்குச் செவிசாய்க்காவிடில் நாளை வேலைநிறுத்தத்தில் ஈடுபடத் தயாராக இருக்கும்படி கொள்ளுப்பிட்டி கிளைத்தலைவர் திரு. அல்பிரட் பெரேரா நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் தொழிலாளர்களைக் கேட்டுக் கொண்டார்.

## சேர். சி. வி. கருத்து

கோயம்புத்தூர், ஏப். 26

இளைஞரின் மனதில் மாற்றம் ஏறபடாவிட்டால் விஞ்ஞானம் முன்னேற்றமடையாது என பிரபல விஞ்ஞானி சேர். சி. வி. ராமன் இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

விஞ்ஞான அறிவு மற்ற நாட்டிலிருந்துதான் கிடைக்கிறது என்ற மனப்போக்கு மாறினால்தான் நம்நாட்டில் விஞ்ஞானம் விருத்தியுறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

—

## பாடப்புத்தகங்களை அரசாங்கஅச்சகம் பிரசுரிக்கும்?

### மாணவர்களுக்கு இலவச பாடப்புத்தகம் அளிக்கவும் திட்டம்

கொழும்பு, ஞாயிறு

மலிவான பாடப் புத்தகங்களைப் பிரசுரித்து வெளியிடும் உரிமைகளை அரசாங்க அச்சகம் பொறுப்பேற்க வேண்டுமென்று கல்விமந்திரி திரு. பி. பி ஜி. கலுகல்லை அரசாங்கத்துக்குச் சிபார்சுசெய்துள்ளார்.

அரசாங்க அச்சகத்தில் பிரசுரமாகும் பாடப்புத்தகங்கள் கல்விப் பகுதியின் மூலம் மாணவர்களுக்கு விற்பனைசெய்யப்படலாமென்றும் கல்வி மந்திரி சிபார்சு செய்துள்ளார். பாடப்புத்தகங்களின் விலைகளைக் கல்வியமைச்சு குறிப்பிடுமென்றும் இப்பாடப் புத்தகங்களை மாணவர்கள் பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் மூலமாகவும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் வாங்கிக் கொள்ளலாமென்றும் கல்வியமைச்சர் சிபார்சுசெய்துள்ளார்.

கல்வியமைச்சரின் ஏனைய சிபார்சுகள் வருமாறு:

ஆறுவது வகுப்பிலிருந்து பல்கலைக்கழக பிரவேசப் பரீட்சை வரை மாணவர்களுக்குக் குறைந்தது ஒரு பாடப்புத்தகமாவது இலவசமாக வழங்குதல்.

கீழ்ப்பிரிவு வகுப்பில் பிரவேசம் பெறும் ஒவ்வொரு குழந்தைக்கும் பிரதான பாடப் புத்தகமொன்று இலவசமாக வழங்குவது.

கல்வி மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்லையின் மேற்கூறப்பட்ட சிபார்சுகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் அடுத்த வருடத்தில் பாடசாலைகள் ஆரம்பிக்கும் காலத்தில் இத்திட்டம் அமுலாகுமென நம்பப்படுகிறது.

—

## புதிய அசைஸ் கமிஷனர்

கொழும்பு, ஞாயிறு

கொழும்பு உதவிமாவட்ட நீதிபதி திரு. ஓ. எல். டி. கிறெட்ஸர் அசைஸ் கமிஷனராக நியமனஞ் செய்பட்டுள்ளார். திங்கட்கிழமை திருக்கோணமலையில் ஆரம்பமாகும் அசைஸ் கோர்ட்டுக்கு அவர் தலைமை தாங்குவார்.

திரு. எஸ். ஆர். விஜயதிலகா கொழும்பு மாவட்ட நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## "அன்னை லலிதாம்பிகை அருட் பேராயிரம்"

யாழ்ப்பாணம், திங்கள்

அம்பிகையின் அருட் பிரபாவங்களைக் கூறும் அன்னை வழிபாடு பற்றிய வடமொழி லலிதா சகஸ்ரநாம பாராயணத்தை "அன்னை லலிதாம்பிகை அருட் பேராயிரம்" என்ற பெயரில் ஒரு நூலாக திரு. க. வை. ஆத்மநாத சர்மா தமிழில் இயற்றியுள்ளார் இந்நூல் வெளியீட்டு விழா 3-5-64 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வண்ணை வைத்தியேசுவர வித்தியாலயத்தில் சேர். கந்தையா வைத்தியநாதன் தலைமையில் நடைபெறுகின்றது. நேற்று நடைபெறுவதாக ஏற்கனவே வெளியாகியிருந்த அறிவித்தலை திருத்திக் கொள்க.

## சிங்கள நிபந்தனையை கைவிடக் கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

சுயபாஷா தமிழ் ஆசிரியர்கள் தமிழே போதனமொழியாகக்கொண்டு தமிழில் தராதரம் பெற்றவர்கள் என்றும் இவர்கள் தமிழைப் போதனமொழியாகக் கொண்ட மாணவர்களுக்கே கல்வியூட்டுவதாகவும் அந்நியர் ஆட்சிக்காலத்திற்கூட சுயமொழி ஆசிரியர்கள் நிருவாகப் பாஷையை மேற்கொள்ளவேண்டுமென நிர்ப்பந்திக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டு பொருளாதாரம், கல்வி, கலாச்சாரம், சமூகவளர்ச்சி, நாட்டின் முன்னேற்றம் ஆகியவற்றை அடிப்படையாகக் கருதித் தமிழாசிரியர்கள் சிங்களம் கட்டாயமாக தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனையைக் கைவிடுமாறும் இதற்கிணங்க 618-ம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபத்தை வாபஸ் பெறுமாறும் பிரதம மந்திரியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் அண்மையில் நடைபெற்ற அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழ்த் தராதரப்பத்திர ஆசிரிய சங்கக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

வில்மட் பெரேராவின் சம்பளத் திட்டத்தை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவருமாறு நிதிமந்திரியையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

### மணிவாக்கு

வாழ்க்கையின் நோக்கத்தை அறியாத ஒருவர் பலவருடங்கள் வாழ்ந்தும் பயனென்ன? உண்மையைத் தேடிச் செல்லும் வாழ்க்கை எவ்வளவு குறுகியதாக இருப்பினும் அது மிகவும் மதிப்புள்ளது.

— ஸ்ரீமத்பாகவதம்


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Dail, Post Box 49, Jaffna
Telegram. EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு சித்திரை ௴ 15 ௳ (27-4-64)


## யாழ்ப்பாண பிரதேச பஸ் சேவை

யாழ்ப்பாண பிரதேச பஸ் சேவையைப்பற்றி வெளியான ஓர் அறிக்கையின்படி இங்கு 25 பஸ்ஸுகளும் 23 சாரதிகளும் 19 கண்டக்டர்களும் அதிகப்படியாகத் தேவையாகும். இதுபற்றி பிரதேச அதிகாரிகள் பன்முறை அறிவுறுத்தியும் இ. போ. ச. மேலதிகாரிகள் நிறைவேற்ற முன்வரவில்லை.

சென்ற சிவராத்திரியின் போது திருக்கேதீச்சர யாத்திரைக்காக 15 விசேஷ பஸ்ஸுகள் வேண்டுமென்று முறையிட்டும் பயனில்லை என்று தெரிகிறது. யாழ்ப்பாண விஷயத்தில் இ. போ. ச. அதிகாரிகள் மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டி அலட்சியமாக இருக்கின்றார்களா, அல்லது இதற்கு வேறு காரணமா? இது எப்படியாயினும் போதிய பஸ்ஸுகளும் சாரதிகளும் கண்டக்டர்களும் இல்லாதமையால் இங்கு பொதுமக்களுக்கு எவ்வளவு அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளன என்பதைச் சுலபமாக உணரலாம்.

இப்பகுதியில் இப்போது தனிப்பட்ட 'மோட்டார்வான்'கள் தான் பொதுமக்களின் இத்தேவையை ஓரளவு ஈடு செய்கின்றன. இந்த 'மோட்டார்வான்'களில் மக்கள் புளிமூடைகள் மாதிரி நெருக்கி மிகவும் வசதியீனங்களுக்கிடையே செல்லுவதைப் பார்க்கலாம். போதிய பஸ்ஸுகள் இருப்பின், மக்கள் இப்படி அவதிப்படத் தேவையிராது. அத்துடன் பஸ் சேவைக்குக் கிடைக்க வேண்டிய வருமானமும் மிகவும் குறைவதாக இருக்கின்றது.

மேலும் "ஸ்ரீ" பிரச்னை காரணமாக இப்பகுதி மக்களுக்குப் புதிய பஸ்ஸுகள் கிடைக்கவில்லை. எல்லாம் பழைய ஓட்டை உடைசல்கள். தெருவெல்லாம் கரிய விஷப் புகையை விட்டுக் கொண்டு ஊர்மக்களின் சுகாதாரத்தையும் இவை கெடுப்பதாகவுள்ளன. பொதுமக்களின் நன்மை பற்றி அரசாங்கத்துக்கு இம்மியும் அக்கறையிருப்பின் இவ் விஷயமாகப் பிடிவாதம்காட்ட முடியாது. அரசியல் முதலிய நோக்கங்களைவிட மக்களின் வசதியையும் நன்மையையுமே பிரதானமாகக் கருதிக்காரியம் செய்ய வேண்டியது அரசாங்கத்தின் மேலான பொறுப்பும் கடமையுமாகும். மற்றப்பகுதிகளில் புதிய பஸ்ஸுகளை அனுப்பி தமிழ்ப்பகுதி மக்களுக்கு அந்த வசதிகளை எக்காரணம்பற்றியும் அளிக்காமல் இருப்பதன்மூலம் அரசாங்கம் தன்னை பாரபட்ச வேற்றுமைக் குற்றத்துக்கு உட்படுத்திக் கொண்டதாகும்.

இவ்வளவு குறைகள் இருப்பினும் இப்பகுதியில், லட்சியத் தொகையைவிட அதிக வருமானம் கிடைத்துள்ளதாம். குறைகளை நீக்கி, போதிய பஸ்ஸுகளை இங்குவிடுவதால் வருமானம் மேலும் அதிகரிக்குமென்பதைச் சொல்லத்தேவையில்லை. மற்ற இடங்களில் வருமானம் குறைந்து நஷ்டமும் ஏற்படுகையில் யாழ்ப்பாணப் பகுதியில் வருமானம் எதிர்பார்த்ததைவிட அதிகரித்திருப்பது பாராட்டத்தக்கதாகும். இதைக்கருதியாயினும் அரசாங்கம் இவ்விஷயத்தைப்பற்றிப் புனராலோசனை செய்து இப்பகுதி விஷயமாக அதிக தாராள மனப்பான்மை காட்டி இங்குள்ள பொதுமக்களின் போக்குவரத்துக் கஷ்டங்களைக் கூடுமானவரை குறைக்க முன்வர வேண்டுமென்று எதிர்பார்ப்பது மிகையல்ல.

ஈழநாட்டில் நாகபூஷணி அம்மன் கோவில்கள்

# சண்டிருப்பாய் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

— வை. முத்துக்குமாரசுவாமி பி. ஏ. —

**சண்டிருப்பாய் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் இரதோற்சவமும் தீர்த்தோற்சவமும் நேற்று சித்திராபூரணையில் சிறப்பாக நடைபெற்றன, இக்கட்டுரை நேற்றைய 'ஈழநாடு' இதழில் வெளியான கட்டுரையின் இன்னொரு பகுதியாக இங்கு வெளியிடப்பெறுகிறது.**

எமது தந்தையார் யாழ்ப்பாணம் நாவலர் கோட்டத்து க. வைத்தியலிங்கம் அவர்கள் (அவர்களுடைய சகோதரன், தங்கை வழிவந்தோர் இன்றும் சண்டிருப்பாயில் இந்த அம்மன் கோவில்சூழலில் உளர்) இக்கோவிலுக்கு முதன் முதல் திருவாசியை வாங்கி அனுப்பி வைத்ததாகவும் சீரணி நாக அம்பாளைப்பற்றிய பல அதிசயங்களையும் எமக்குக்கூறியுள்ளார். மலாயாவில் இருந்து பல யாழ்ப்பாணத்தவர்கள் (நாகேந்திரம் அவர்கள் உட்பட) இப்பணிக்கு உதவியுள்ளனர்.

இன்று திருப்பணிச்சபையார் விடுத்துள்ள கோரிக்கையின்படி யாழ்ப்பாணம் ஐக்கியலாப நிதிச் சங்கத்துச் சிருப்பர் சு. கனகசபை அவர்கள் இக்கோவிலுக்கு சிறந்த உதவி செய்துள்ளார்கள்.

இக்கோவிற்பூசகராக இருப்பவர் சோமசுந்தரசர்மா. முக்கிய விழாக்களையும் விசேட பூசைகளையும் நடத்தி வைப்பவர் கல்வளை இரத்தினக்குருக்கள் ஆவர். இவர் பரம்பரை பரம்பரையாக இதில் ஈடுபட்டிருக்கின்றனர். தினசரி ஆறு வேளைகளில் பூசை நடைபெறுகின்றது.

இரவில் கடைசியாகப் பால் படைக்கப்படுகின்றது. சில வேளைகளில் இதை அடுத்த காலையில் காணமுடியுமாம். இக் கோவிலில் வெள்ளிக்கிழமை திங்கட்கிழமைகளில் ஏராளமான பக்தர்கள் வருகிறார்கள். தைப்பூசம், மாசி சிவராத்திரி (சித்திரையில் கொடியேறி பத்துநாட்களுக்குவிழாக்கள் நடைபெறுகின்றன.) ஆனி, (மணவாளக் கோலம்) ஆடிப்பூரம், புரட்டாதி, ஐப்பசி நவராத்திரி, ஐப்பசி வெள்ளிக்கிழமை, கார்த்திகை கந்தர் சஷ்டி, மார்கழித் திருவெம்பாவை முதலிய தினங்களில் இக்கோவிலில் விசேடபூசைகள் நடைபெறுகின்றன.

கந்தர் சஷ்டி ஆறுநாட்களும் கந்த புராணமும், திருவெம்பாவை நாட்களில் திருவாதபுராணமும் புராண படனம் செய்யப்படுகின்றன. இக்கோவிலில் ஐந்து தலை நாகம், காராம்பசு, ஆட்டுக்கிடா, குதிரை, (இரட்டை) இடபம், சூரபத்மன் முதலிய அசுரரின் அழகான வாகனங்கள் உள்ளன. சென்ற 1963-ம் ஆண்டு சித்திரை பௌணர்மி அன்று திருவாட்டி தம்பையா வள்ளியம்மை அவர்களால் செய்து கொடுக்கப்பட்ட சிறந்த தேரில் அம்பாள் அமர்ந்து முதன் முதலாக தேர் விழா அதிசிறப்பாக நடைபெற்றது.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை சாயந்தரங்களில் இத்தலத்திற்கு நல்லூர் பஜனைக் கோஷ்டிவந்து கூட்டுப்பிரார்த்தனை நடாத்திச் செல்கிறது. இக்கோவிலுக்கென 11/2 கொத்து அல்லது 2 கொத்துக் கொள்ளக்கூடிய பிடிக்குட்டான்கள், கட்டுடை, சண்டிருப்பாய், அளவெட்டி என்னும் கிராமங்களில் உள்ள இந்து மக்களிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொருநாளும் நாகபூஷணி அம்மனுக்காக ஒரு பிடி அரிசியை இக்குட்டானில் போட்டு வைப்பர். மாதம் முடிவில் இக்குட்டானில் உள்ள அரிசியைச்சேர்த்து விற்று, கோவிற் செலவுக்காக உபயோகிப்பார்கள். கீரிமலைச் சிவன் கோவிலை அமைக்க நாவலர் ஐயா இம்முறையைக் கையாண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

தர்மகர்த்தாக்கள் இக்கோவிலின் முகப்பிலே "இங்கு" தேவகணிகையர் நடனம்"செய்வித்தல் கூடாது என்று பெரிய எழுத்துக்களில் அறிவித்தல் செய்திருக்கிறார்கள். இங்கு "பலி" (வேள்வி) நடைபெறுவதில்லை. நாகபூஷணி அம்மன் கோவில் திருப்பணிச் சபையினர் ஒரு மலரும் வெளியிட்டிருக்கின்றனர்.

இவ் ஆலய வாயிலின் தோற்றம் அழகும், அன்பும் அச்சமும் கலந்துள்ளதாக இருக்கிறது. மூலஸ்தானத்தில் ஒரு பாம்பின் (குடைபோல்) கீழ் அருள் புரியும் நாகபூஷணி அம்மனின் கற்சிலைவடமேற்குப் பக்கத்திலே ஒரு வடிவேல். தென் மேற்கில் பிள்ளையார். வடக்கில் ஒரு வைரவ சூலம். இவை பரிவாரத் தெய்வங்கள்.

பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி த்ரியம்பகி யெழிற்
புங்கவி விளங்குசிவ சங்கரி
சகஸ்ரதள
புட்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனுதீத நாயகிகுணதீத
நாதாந்த சத்தி யென்றுன்
நாமமே யுச்சரித் திடுமடியர்
நாமமே
நானுச்சரிக்க வசமோ.

(தாயுமானவர் பாடல்.)

# "மத்திய தொழிற்சங்கத்தை ஸ்தாபித்து போராடவேண்டும்"

## பீடித் தொழிலாளர் சங்க கூட்டத்தில் யாழ். பிரதிநிதி பேச்சு

யாழ்ப்பாணம், ஞாயிறு "எந்த ஒரு தொழிற் சங்கமும் தனித்து நின்று போராடி தனது கோரிக்கைகளை வென்றிருக்க முடியாது. இலங்கையிலுள்ள பீடித்தொழிலாளர்கள் இத் தீவின் பல பாகங்களிலும் சிதறுண்டு ஸ்தாபன இணைப்பின்றி இருப்பதன் காரணமாக பீடித்தொழிலில் ஈடுபட்டுள்ள முதலாளிகள் தொழிலாளிகளை நசுக்குகின்றார்கள்.

தொழிலாளர்களின் வயிற்றிலடிக்கும் முதலாளிகளிடமிருந்து பீடி இலை இறக்குமதியை கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் பொறுப்பேற்று விநியோகிக்கவேண்டும்" என்று அண்மையில் வடமாகாண பீடித் தொழிலாளர் சங்கக் கூட்டத்தில் இலங்கைத் தொழிற்சங்க யாழ்ப்பாண பிரதிநிதி திரு. இ. பொன்னையா கூறினார்

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இன்று இலங்கையிலுள்ள தொழிலாளர்களின் பிரச்னை தொழிலாளர்களை ஒரே மத்திய தொழிற் சங்கத்தை ஸ்தாபிப்பதும, அச்சங்கத்தின் தலைமையில் ஒரே கொடியின்கீழ் சகல தொழிலாளர்களும் ஒன்று திரண்டு தமது 21 கோரிக்கைகளுக்காகப் போராட்டம் நடத்துவதேயாகும்.

இக் கூட்டத்துக்கு திரு. இ. ஆர். மூர்த்தி தலைமை வகித்தார். கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

பீடித் தொழிலாளர்களாகிய எமது பிரச்சனைகளை தீர்க்க நாம் நடத்தும் போராட்டங்களுக்கு சகல தொழிற் சங்கங்களுடைய ஆதரவையும் தரும்படி எல்லா தொழிற்சங்கங்களுக்கும் அறைகூவல் விடுக்கின்றோம்.

இலங்கையிலுள்ள சகல தொழிற்சங்கங்களும் முன் வைத்த 21 கோரிக்கைகளுக்கான போராட்டத்துக்கு எமது சங்கமும் பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் கொடுக்கின்றது.

இலங்கைத் தொழிற்சங்க சம்மேளன யாழ். கிளை நடத்தும் மே தின ஊர்வலத்துக்கும் பொதுக் கூட்டத்திற்கும் எமது சங்கம் பூரண ஆதரவு கொடுப்பதுடன், ஊர்வலத்திலும் பொதுக் கூட்டத்திலும் கலந்து கொள்ளும்.


## நாட்டிலும் நகரிலும்


## நாட்டிலும் நகரிலும்

யாழ்ப்பாணம் முற்றவெளியிலுள்ள திறந்த வெளியரங்கில் ஒவ்வொரு பௌர்ணமிக்கும் கலைநிகழ்ச்சிகளை நடத்தி இலவசமாக ஜனங்களுக்கு ஒரு பொழுதுபோக்கை ஏற்படுத்தியுள்ள மாநகரசபையைப் போற்றவேண்டும். இதனால் பொதுமக்களுக்குக் கலையை ரசிக்கும் பண்பு ஏற்படுவதோடு கலைஞர்களுக்கும் பெரும் ஆதரவு கிட்டுகிறது. கிராமசபை, பட்டினசபை முதலியன மனிதர்களின் அத்தியாவசிய தேவைகளாகிய போக்குவரத்து, சுகாதாரம், குடியிருப்பு முதலியவற்றைக் கவனிப்பதோடு நின்றுவிடாமல், நூல்நிலையங்கள், கலையரங்குகள் மூலம் அவர்களுடைய ஆத்ம சாந்திக்கும் வழி செய்து கொடுப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. முற்றவெளி கலையரங்கில் மழைகாலத்துக்கு என்ன ஏற்பாடு செய்யப்போகிறார்களோ தெரியவில்லை.

மாநகரசபையைப் போல பட்டினசபைகளும், கிராம சபைகளும் தத்தமது வட்டாரங்களிலுள்ள கலைஞர்களுக்கு ஊக்கமளித்து மறைந்து போய்க்கொண்டிருக்கும் நாட்டுக்கூத்து, கரகம், காவடி, சீனடிசிலம்படி முதலிய கலைகளுக்கும் புத்துயிர் அளித்தாலென்ன? இந்த வழியில் கலாசார இலாகா, உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஒரு விசேஷ 'கிரான்ற்' கொடுத்தால் நன்றாயிருக்கும்.

* * *

மகாமகோபாத்யாய உ. வே. சாமிநாதையர் அவர்கள் இறைவனடி எய்திய தினம் சென்ற புதனன்றாகும். இருட்குகையில் மண்டிக் கிடந்த சிலப்பதிகாரம் முதலிய இலக்கியச் செல்வங்களை வெளிக் கொணர்ந்தவர் ஐயரவர்கள். தமது சொந்த தேக நலனைக்கவனிக்காமல் வெய்யில் என்றும் மழை என்றும் பாராமல் ஊர் ஊராகச் சுற்றி ஏடு ரூபத்தில் கிடந்த பல சங்கநூல்களை அவர் அச்சேற்றிவைத்தார்.

யாழ்ப்பாணம் கொழும்புத் துறையிலுள்ள இலந்தைநகர் ஸ்ரீதண்டபாணித்தெய்வத்தின் மீது அவர் பாடியுள்ள விருத்தம், ஊஞ்சல், எச்சரிக்கை, கீர்த்தனங்கள் இவை அடங்கிய ஓர் அரிய நூலைப் பார்த்தேன். இது 73 ஆண்டுகளுக்கு முன் கொழும்புத்துறை ஸ்ரீ குமாரசாமிச் செட்டியாரவர்களின் விருப்பப்படி அவர் இயற்றியதாக அதில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இதில் காப்புப் பாவாக அவர் பாடியுள்ளதாவது:-

குயில் வாழ் பொழிலிலந்
தைக் கோநகர் வாழ் செல்வே,
ளயில் வாழ் மலர்க்கை யமலன்—மயில் வாழ்,
பெருமான் றனைத்துதிப்பப்
பேதையே னஞ்சில்,
வருமா வொருகோட்டுமா.

* * *

கிராம சபைத் தேர்தல்கள் சில இடங்களில் நடந்துகொண்டிருக்கின்றன. வேறிடங்களில் இனிமேல் தான் நடக்கப்போகின்றன. பாராளு மன்றத் தேர்தல்களில் காணப்படும் உற்சாகமும் போட்டா போட்டியும் இந்தத் தேர்தல்களில் இல்லாவிட்டாலும் விரலுக்கு ஏற்ற வீக்கம் இருக்கத்தான் செய்கிறது.

கட்சி அடிப்படையில் போட்டியிடும் வழக்கம் இன்னும் கிராம சபைகளுக்கு வந்து சேரவில்லை. அபேட்சகர் ஒருவர் கிராமத்தில் வகிக்கும் அந்தஸ்திலும் அவர் கைவிடக்கூடிய 'ஸம்திங்' கிலும் தான் வெற்றி தோல்வி தங்கியிருக்கிறதாம். போட்டியிடுபவர்கள் பெரும் புள்ளிகளாய் இருந்தால் அவர்களை 'ஆதரிக்கிறோம்' என்று கூறிக் கொள்ளும் சிலருக்கு நல்ல வேட்டை. ஒவ்வொருவரிடத்திலும் 'ஸம்

(4-ம் கலம்பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

திங்' பெற்றுக் கொள்வார்கள், தோதல் காய்ச்சல் ஏற ஏற போத்தல் காய்ச்சலும் ஏறிக் கொண்டு போகும்.

கிராம சபை அங்கத்தவர்களுக்கு சம்பளமோ, அலவன்ஸோ கிடையாது. அப்படியிருந்தும் ஏன் இத்தனை பேர் அங்கத்தவர்களாவதற்கு விரும்புகிறார்கள் என்று கேட்டால் பல பலமறுமொழிகள் கிடைக்கும். அதை விளக்கத் தேவையில்லை.

ஜனநாயக ஆட்சியின் மூலாதாரமான அடிப்படை கிராம நிர்வாகமே. உள்ளூர் ஆட்சி ஊழலின்றி ஒழுங்காய் நடந்தால் மத்திய அரசாங்கமும் ஒழுங்காக நடக்கும் என்பதில் ஐயமில்லை. கிராமசபைத் தலைவர்களில் பலர் பின்பு பாராளு மன்றப் பிரதிநிதிகளாக ஏதுவுண்டு. ஆகையால் தேசத்தொண்டுக்கு அத்தியாவசியமான சுயநலமற்ற சேவை கிராமங்களில் தான் முளைக்க வேண்டும்.

—வழிப்போக்கன்

# மலேஸியாவில் பிரதமர் துங்குவின் ஆளும் கட்சி வெற்றி

## பார்லிமெண்ட் தேர்தலில் இதுவரை 80ஸ்தானங்கள்பெற்றது

கோலாலம்பூர், ஏப்ரல், 26

**மலேஸிய பார்லிமெண்டுக்கு நடைபெற்ற தேர்தலில் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மானின் ஆளும் கட்சியான "அலையன்ஸ்" கட்சி வெற்றிபெற்றிருக்கிறது.**

மொத்த ஸ்தானங்கள் 159ல் இதுவரை ஆளும் கட்சிக்கு 80 ஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றன. இன்னும் 50 ஸ்தானங்களின் முடிவு அறிவிக்கப்பட வேண்டியிருக்கிறது.

சென்ற பார்லிமெண்டில் ஆளும்கட்சி மொத்தம் 77 ஸ்தானங்களையே பெற்றிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சிங்கப்பூர், ஸரவாக், போர்னியோ ஆகிய இடங்களில் ஏற்கெனவே தேர்தல்கள் முடிவடைந்துவிட்டன.

துங்கு ரஹ்மானின் கட்சிக்கு 60% சதவிகித வாக்குகள் கிடைத்திருக்கின்றன. துங்கு தனது சொந்தத் தொகுதியில் 11,000 பெரும்பான்மை வாக்களால் வெற்றிபெற்றார்.

இந்தோனேஷிய ஆக்கிரமிப்பை முறியடிக்க மலேஸியா கொண்டுள்ள முயற்சிக்கு இத்தேர்தல் பூரண ஆதரவை வெளிக்காட்டிவிட்டதாய் பிரதமர் பின்பு அறிவித்தார்.

## இலங்கை-இந்தியர் பிரச்னைபற்றி விரைவில் ஆலோசனை

### லோகசபையில் நேரு அறிவிப்பு

புதுடில்லி, ஏப். 25

இலங்கையிலுள்ள இந்தியர் பிரச்னையை தீர்க்க இலங்கை அரசாங்கம் ஆவல் கொண்டுள்ளது போலவே இந்திய அரசாங்கமும் ஆவல் கொண்டுள்ளதாக பிரதமர் திரு. நேரு லோகசபையில் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார். இப்பிரச்னை பற்றி விரைவில் ஆலோசனை செய்யப்படும்எனவும்தக்கமுறையில் தீர்வுகாணப்படும் எனத்தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கைப் பிரதமர் புதுடில்லிவந்து இதுபற்றி பேச்சுவார்த்தை நடத்துவதாக இருந்தாகவும், அவரால் வரமுடியாமல் போய்விட்டதால் எதுவும் செய்யமுடியவில்லை என்றும் திரு. நேரு தெரிவித்தார். இனியும் இலங்கைப் பிரதமர் வரமுடியாமலிருந்தால் வேறு வழிவகைகளைப் பார்க்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். இப்பிரச்னைக்கு எந்த வகையில் தீர்வுகாணப்பட வேண்டுமெனக் கூறும்வகையில் முறையான கடிதம் எதுவும் இலங்கையிடமிருந்து கிடைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து திருமதி லஷ்மி மேனன் குறிப்பிடுகையில் இலங்கையைவிட்டு இந்தியா திரும்பும் ஒவ்வொருவருக்கும் 1000 ரூபா கொடுக்கப்படும் என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளதாகவும் அந்த நிபந்தனையுடன் இதுவரை எவரும் இங்கு வந்ததாக தெரியவில்லை என்றும் குறிப்பிட்டார்.

## "தங்கனீகா - ஸான்ஸிபார் ஐக்கிய குடியரசு"

தாருல் இஸ்லாம், ஏப். 26

தங்கனீகா — ஸான்ஸிபார் இணைப்பை இரு நாடுகளும் உத்தியோகபூர்வமாக அங்கீகரித்துவிட்டன.

"தங்கனீகா — ஸான்ஸிபார் ஐக்கிய குடியரசு" என்ற பெயரில் புதிய நாடு அழைக்கப்படும்.

தங்கனீகா அதிபர் திரு. ஜூலியஸ் நியரரே இதுசம்பந்தமாகப் பேசுகையில் ஆபிரிக்க ஐக்கியத்தை முன்னிட்டே இருநாடுகளும் இணைவதாகக் கூறினார்.

கென்யா, உகண்டா ஆகிய இருநாடுகளும் இணைப்பை வரவேற்றிருக்கின்றன. —— லா வோஸ்

### சவான் வாஷிங்டன் செல்வார்

புதுடில்லி, ஏப். 26

இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. சவான் அடுத்த மாதம் 17-ந் திகதி அமெரிக்காவுக்கு விஜயம்செய்வாரென எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்க பாதுகாப்பு மந்திரி திரு. மக்னமாராவையும் இதர அதிகாரிகளையும் அவர் சந்தித்துப் பேசுவார். 12 நாள் அமெரிக்காவில் தங்கியபின், பிரிட்டனுக்கு விஜயம்செய்து அங்கு அதிகாரிகளைச் சந்தித்துப் பேசுவார். திரு. சவானின் அமெரிக்க விஜயத்திற்கு ஒழுங்குசெய்யும்பொருட்டு. ஏற்கனவே அதிகாரிகள் கோஷ்டியொன்று வாஷிங்டன் சென்றிருக்கிறது.

### புரட்சி சபையின் கடும்போக்கு

வியண்டைன், ஏப். 26

சுவர்ணபூமா அரசாங்கம் புதிய அரசாங்கத்தில் மாற்றம் செய்யாவிட்டால் மீண்டும் வலதுசாரி ராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றுமெனப் புரட்சிசபைத் தலைவர் அறிவித்தார்.

திருத்தியமைக்கப்படும் மந்திரி சபையில் யார்யார் நியமிக்கப்படவேண்டும் என்ற ஜாபிதாவைப் புரட்சிசபை இளவரசரிடம் கொடுத்திருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

---

### ஷேக் அப்துல்லா

ஸ்ரீநகர், ஏப்ரல் 26

காஷ்மீரின் நிச்சயமற்ற நிலை முடிவடையவேண்டும் என்றும், நேருவுடன் பல்வேறு அம்சங்களைப் பற்றியும் தாம் பேசப் போவதாயும் ஷேக்அப்துல்லா கூறினார்,

### தலாய் லாமா

புதுடில்லி. ஏப். 26

தலாய்லாமா பௌத்த நாடுகளுக்கு விஜயம் செய்வதில் அரசாங்கத்துக்கு ஆட்சேபம் எதுவும் கிடையாது என்றும், இதற்கான வசதிகள் சிலவற்றையும் இந்தியா செய்துதரும் என்றும் மந்திரி லால்பகதூர் சாஸ்திரி கூறினார்.

---

### ரஷ்ய விண்வெளி கிரகம்

மாஸ்கோ, ஏப். 26

ஆளில்லா வானவெளிக் கப்கல் ஒன்றை ரஷ்யா வான்வெளிக்கு அனுப்பியிருக்கிறது. இந்த வரிசையில் ரஷ்யா அனுப்பிய 29-வது கப்பல் இது.

---

### 10000 பௌத்தர் வெளியேற்றம்

புதுடில்லி, ஏப். 26

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து அஸ்ஸாமுக்குள் வந்திருக்கும் பௌத்தர்களின் எண்ணிக்கை 10,000 த்துக்கு மேல் ஆகிவிட்டதாய் அறிவிக்கப்படுகிறது.

---

### டாங்கே குற்றச்சாட்டு

புதுடில்லி, ஏப், 26

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் பிளவு உண்டுபண்ண முயற்சிப்பதாக கம்யூனிஸ்ட் தலைவர் டாங்கே சீனுமீது குற்றஞ்சாட்டினார். கட்சியிலிருந்து விலக்கப்பட்ட 32 பேரும் சீனுவின் இச்சதிக்கு உடந்தையானவர்கள் என்றும் அவர் கூறினார்.

---

### பென்பெல்லாவுக்கு பெரும் வரவேற்பு

மாஸ்கோ, ஏப். 26

நேற்று மாஸ்கோவுக்குவந்து சேர்ந்த அல்ஜீரிய ஜனாதிபதி பென்பெல்லாவுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பென்பெல்லா ரஷ்யாவுக்குவிஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும். செஞ்சதுக்கத்தில் நடைபெறவிருக்கும் மேதின அணிவகுப்பு ஊர்வலத்தை பென்பெல்லா பார்வையிடுவார்.

---

### போப்பாண்டவர்

வத்திக்கான், ஏப்ரல் 26

அடுத்த அக்டோபர்-நவம்பரில் இந்தியா செல்வதுபற்றி போப்பாண்டவர் இன்னும் நிச்சயமாக முடிவுசெய்யவில்லை என வத்திககான் வட்டாரங்கள் கூறுகின்றன. இந்தியா வருமாறு அவர் அழைக்கப்பட்டிருக்கிறார்.

---

### பர்மா இந்தியர்

புதுடில்லி, ஏப்ரல் 26

பர்மாவிலுள்ள இந்தியர்களின் உடைமையை அரசாங்கம் மேற்கொண்டு விட்டதால், அவர்களது சொத்துக்களுக்கு நஷ்டஈடு தருவதுபற்றி பர்மிய அரசாங்கத்துடன் பேச்சு நடத்துமாறு இந்திய வர்த்தகர் சம்மேளனம் வெளி விவகார இலாகாவைக் கேட்டிருக்கிறது. அங்கிருந்து வெளியேறி வருபவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும்படியும் அது கேட்டுக்கொண்டிருக்கிறது.

## மாதச் சம்பளம் ரூ. 500; தினசரிப்படி ரூ. 31

### இந்திய எம்.பி.க்களின் வருமானம் உயர்வு

புதுடில்லி, ஏப்ரல் 26

பார்லிமெணட் அங்கத்தினர்களின் ஊழியத்தையும், படிகளையும் உயர்த்த வகைசெய்யும் மசோதா நிறைவேறாமல் தடுக்க எதிர்க்கட்சி எம். பி.க்கள் பிடிவாதமாக முயன்றும் மசோதா லோகசபையில்நிறைவேறியது.

உ. பி. யைச் சேர்ந்த காங்கிரஸ் அங்கத்தினர் திரு. ரகுநாத் சிங், கொண்டுவந்த இந்த தனிநபர் மசோதாவை ஒரு காங்கிரஸ் எம். பி. யும் எதிர்த்தார்.

எம். பி. க்களின் மாதச் சம்பளத்தை ரூ. 400 லிருந்து 500 ஆக உயர்த்தவும், தினப்படியை ரூ. 21 லிருந்து 31 ஆக உயர்த்தவும் மசோதாவழிசெய்கிறது.

புதுடில்லியிலிருந்து ஒரு குறிப்பிட்ட தூரத்தில் வசிக்கும் எம். பி. க்களுக்கு விமானப் பயணத்திற்கும் இது வழிசெய்கிறது.

விலைவாசிகள் ஏறியவண்ணம் இருந்து, பாமரமக்கள் வாழ்க்கை நடத்துவதே மேன்மேலும் சிரமமாகிவருகையில் எம். பி. க்கள் தங்கள் சம்பளத்தை உயர்த்திக்கொள்வது முறையல்ல என மசோதாவைத் தாக்கிப்பேசிய அனைவரும் கூறினர்.

எம். பி. க்கள் மேஜைகளைத் தட்டியதனாலும், சிலர் கூவியபடி யிருந்ததாலும் ஏற்பட்ட இடைவிடாத அமளிதுமளிக்கிடையில் மசோதா நிறைவேறியது. கம்யூனிஸ்ட் எம் பி. க்கள் திரு. ஹோமிதாஜியும் ஸ்ரீமதி விமலாதேவியும் ஓட்டெடுப்புக்கு முன்பே வெளியேறினர்.

இந்தச்சமயத்தில் மக்களின் மனோபாவம் எ[illegible]ருக்கிறதென்பதைக் கவனிக்கவேண்டும் என்றும், இப்போது மசோதாவை நிறைவேற்றக்கூடாது என்றும் திரு. அமர்நாத் வித்யாலங்கார் கூறினர்.

மக்கள் முழுப்பட்டினி நிலையிலும் அரைப்பட்டினி நிலையிலும் கஷ்டப்படும்போது எம்.பி.க்கள் ஊதிய உயர்வு கோருவது நெறியல்ல என திரு. ஹோமிதாஜி கடுமையாகத் தாக்கிப் பேசினர்.

சீன பாகிஸ்தானிடமிருந்து அபாயத்தை எதிர்நோக்கியுள்ள நிலையில், லட்சக்கணக்கான அகதிகள் நாதியற்றவர்களாக இந்நாட்டுக்கு வந்துகொண்டிருக்கும் நிலையில் எம். பி.க்கள் அதிக சம்பளம் கோருவது, ரோமாபுரி பற்றி எரிகையில் நீரோ பிடில் வாசித்த கதையை நினைவூட்டுகிறதென திரு. பானர்ஜி கூறினர்.

இந்த கறுப்பு மசோதாவைக் கொண்டுவருவதற்காக மகாத்மா காந்தியின் ஆவி நம்மைச் சபிக்குமென திரு. யாதவ் கூறினர்.

பொதுஜன ஊழியரின் வாழ்க்கை எளிமைக்கும் தியாகத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்கவேண்டுமென்றார் சுவாமி ராமானந்த்.

## "ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டில் ரஷ்யாவுக்கு இடமுண்டு"

### சீனு மீது "பிராவ்டா" கண்டனம்

மாஸ்கோ, ஏப். 26

ஜாகர்த்தாவில் நடைபெற்ற ஆசிய-ஆபிரிக்க நாடுகளின் ஆயத்த கூட்டத்தில் ரஷ்யா சம்பந்தமாக சீனு மேற் கொண்ட போக்கை "பிராவ்டா" பத்திரிகை கண்டித்திருக்கிறது.

ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டுக்கு ரஷ்யாவையும் அழைக்க வேண்டும் என இந்தியா கோரியதும், சீனு இதை வன்மையாக எதிர்த்ததும் அனைவருக்கும் தெரியும்.

"ரஷ்யா ஒரு ஆசிய நாடல்ல என சீன வெளிநாட்டு மந்திரி மார்ஷல் சென் யீ கூறியது அபத்தம்" என்றும் பிராவ்டா கண்டித்தார்.

ரஷ்யாவில் மூன்றில் இரு பகுதி ஆசியாவிலேயே இருக்கிறதென்று பிராவ்டா கூறியது.

பீகிங் அடிச்சுவட்டைப் பின்பற்றும் கோஷ்டி ஒன்றை ஏற்படுத்துவதின் மூலம், பிளவை ஏற்படுத்த முயற்சிப்பதால் சீனு மீது அது குற்றஞ் சாட்டியது.

## அப்துல்லா டில்லியில் 1 வாரம் தங்குவார்

### நேரு - ஷேக் பேச்சுக்கு ஹிந்து மகாசபை எதிர்ப்பு

புதுடில்லி, ஏப். 26

அடுத்த புதன்கிழமை புதுடில்லி வரும் ஷேக் அப்துல்லா 7 அல்லது 8 நாட்கள் இங்கு தங்கியிருப்பார் எனத் தெரிகிறது.

ஞாயிற்றுக் கிழமை அவரை டில்லிக்கு அழைப்பதென முதலில் உத்தேசிக்கப்பட்டிருந்தாயும், ஆனால் நியூயோர்க்கிலிருந்து ஸ்ரீமதி இந்திரா காந்தி திரும்புவதற்கா இந்த யோசனை மாற்றப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

அப்துல்லாவை நன்கு உபசரிக்கும பொறுப்பு ஸ்ரீமதி காந்தயிடமிருப்பது விருப்பத்தக்கது என பிரதமர் நேரு கருதுவது இதற்குக் காரணம்.

ராஷ்டிரபதி முதல் ஜெயப்பிரகாஷ்[illegible]ரை பலருடன் அப்துல்லா சம்பாஷணை நடத்தக்கூடும் எனத் தெரிகிறது. உபராஷ்டிரபதி டாக்டர் ஸகிர் ஹுஸெய்ன், கல்வி மந்திரி சக்னா, உள்துறை மந்திரி திரு. நந்தா, மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி, டி. டி. கே. ஆகியோருடனும் அவர் பேசுவார்.

அப்துல்லாவுடன் அவருடைய நெருங்கிய சகாவான மிர்ஸா அப்ஸல் பெய்க்கும் செல்வார். ஷேக் டில்லி வருமுன் காஷ்மீர் மன்னர் கரன்ஸிங்கும், உள்துறை மந்திரி திரு. டி. பி. தாரும் டில்லி வருவார்கள்.

மன்னர் கரன்சிங் காஷ்மீர் பிரதமர் ஸாதீக்குடன் ஷேக் அப்துல்லா தெரிவிக்கும் கருத்துக்களின் விளைவாக ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமை பற்றி வாதித்ததாகத் தெரிகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

# "இசையும் நடனமும் தெய்வீகக் கலைகள்"

— சுவாமி சச்சிதானந்தஜி

கண்டி, ஞாயிறு

"நீங்காது நடனமிட்டு உலகத்தை இயக்கும் நடராஜப் பெருமானுடைய தாண்டவத்தினின்று எழுந்ததே பரத நாட்டியம். இந்தக் கலையில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு உலகியக்கும் பெருமானது நடனமும் நன்கு புரியும். இந்தக் கலையை இன்று பயிலவிருக்கும் குழந்தைகள் உண்மையிலேயே பாய்க்கியம் செய்தவர்கள் தாம்" என்று தென்னக் கும்பர சச்சிதானந்த தபோவனத்தில், திருமதி நீலா சத்தியலிங்கம் நடத்திய பரதநாட்டிய வித்தியாரம்பத்தை நடராஜ பெருமானது படத்தின் முன்பு விளக்கேற்றி திறந்து வைத்துப்பேசிய கண்டி இந்திய தூதுவராலய இரண்டாவது காரியதரிசி திரு. இராமகிருஷ்ணராவ் கூறினர்.

மேற்படி விழாவில் ஆசியுரை வழங்கிய யோகிராஜ் ஸ்ரீசுவாமி சச்சிதானந்தஜி பேசுகையில், ஆத்மீக ஸ்தாபனம் ஒன்றிற்கும் நாட்டியத்திற்கும் உள்ள சம்பந்தம் என்னவென்று பலர் கேட்கலாம். இசையும் நடனமும் முழுக்க முழுக்க தெய்வீகக் கலைகள் தான். சிவனின் நடனத்தையும் கண்ணனின் வேங்குழலிசையும் நமகுள் கேட்டுணரும் வழியை அவை காட்டுகின்றன" என்று குறிப்பிட்டார்.

திருமதி நீலா சத்தியலிங்கம் புதிதாக வந்த மாணவிகளுக்கு பரத நாட்டிய வித்தியாரம்பம் செய்துவைத்தார். விழாவில் செல்வி யோகா இராசையாவின் இன்னிசை நிகழ்ச்சியும், செல்வி பவானி தாமோதரம்பிள்ளையின் பரத நாட்டிய நிகழ்ச்சியும் இடம் பெற்றன. விழா பொதுப் பிரார்த்தனையுடன் முடிவுற்றது. கண்டியில் இவ்விதமாக முதல் முறையாக நடைபெற்ற மேற்படி வைபவத்தில் பல சமயங்களைச் சேர்ந்த ரசிகர்களும் வந்து குழுமினரென்பது குறிப்பிடத்தக்கது. இசை, நடன வகுப்புகளில் சேர்ந்து பயில விரும்பும் சிறுமியர் பலர் திரண்டு வந்தனர்.

# "தமிழுக்கும் கலைக்கும் தொண்டு செய்வோம்"

## சாவகச்சேரி எம். பி. வேண்டுகோள்

சாவகச்சேரி, ஞாயிறு

"தமிழுக்குச் செல்வாக்குக் குறைந்திருக்கும் இந்நேரத்தில், தமிழுக்காகவும் உலகுக்காகவும் நாம்செய்யும்பணி மேலானது. கலைஞர்கள் தனக்காகவும், கலையை வளர்க்கவும், சமூகத்தை வளர்க்கவும், மொழியை வளர்க்கவும் தொண்டு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சீன, ரஷ்யாவிலுள்ள கலைஞர்கள் அரசியல் புரட்சியையும் ஏற்படுத்திவர் என்ருல் ஏன் நம்நாட்டுக் கலைஞர்கள் நமக்கு மறுமலர்ச்சி ஏற்படக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடாது".

இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் தென்மராட்சி இசைக் கலைமன்ற ஒன்பதாவது ஆண்டு விழாவிற்குத் தலைமைவகித்து உரையாற்றும்போது கூறினர்.

மேலும் அவர் தொடர்ந்து கூறியதாவது:-

"தமிழ் மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் தலைசிறந்து விளங்கிய முத்தமிழ் இன்று பேச்சு வழக்கிற்கே தடை விதிக்கப் பெற்றிருப்பதால் நாம் எவ்வளவு கண்ணும் கருத்துமாயிருந்து வளர்க்கவேண்டுமென்பது சொல்லவேண்டியதில்லை".

### ஆசிரியருக்குக் கடிதம்

# மாநகரசபை கவனிக்குமா?

யாழ்ப்பாண நகரம் இலங்கையிலுள்ள முக்கிய நகரங்களில் ஒன்ருக இருந்தும் சுகாதார வசதியிலோ அல்லது மற்றும் வசதிகளிலோ பின் தங்கியே இருக்கிறதுஎனலாம். இவ்வித நிலைக்கு அசிரத்தையும் ஒரு காரணம்.

யாழ்ப்பாண நகரத்துக்கு மிக அண்மையிலிருக்கும் பண்ணைக்கடற்கரை, மக்கள் நல்ல காற்று சுவாசிக்க ஏற்ற இடம். தற்போது இங்கு நிலவும் வெப்பம் காரணமாக இக்கடற்கரைக்குப் பலர் செல்கிருர்கள். இவ்விதம் இயற்கையாகவே சுகாதாரமான காற்றை சுவாசிக்கக்கூடிய ஒரு இடத்தில் சிறிது சௌகரியங்களை யாழ். மாநகர சபை செய்து கொடுத்தால் பொது மக்கள் இந்த நல்ல காற்றை சௌகரியமாக இருந்து அனுபவிக்கக்கூடியதாக இருக்கும்.

பண்ணைக்கடற்கரையில் சில ஆசனங்கள் கட்டிவிடவும் மின்சார வெளிச்சங்கள் இன்னும் அதிகரிக்கச் செய்யவும் மாநகர சபை நடவடிக்கை எடுத்தால் மக்கள் மிக்கநன்றியுள்ளவர்களாக இருப்பார்கள்.

ஆ. சி. குணரத்தினம்

கொட்டடி,
யாழ்ப்பாணம்.

# அப்துல்லா . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்துல்லாவின் டில்லி விஜயம் பற்றியும் அவர்கள் விவாதித்தனர்.

நேரு-அப்துல்லா சந்திப்பு நாட்டின் ஒருமைப்பாட்டைக் குலைத்து விடக்கூடும் என அகில இந்திய ஹிந்து மகா சபைத் தலைவர் திரு. தேஷ்பாண்டே ஆட்சேபித்திருக்கிருர்.

"காஷ்மீருக்கு சுயநிர்ணய உரிமை கொடுக்கப்பட்டால் அதே உரிமை வேண்டும் எனக் கிளர்ச்சி செய்யக் கூடும். நாகாலாந்து ஏற்கனவே அதைக் கோரியிருக்கிறது. தென்னிந்தியாவில் ராஜாஜியின் ஆசியுடன் சில கட்சிகள் அந்த உரிமைக்காகக் கிளர்ச்சிகளை ஆரம்பித்திருக்கின்றன. பஞ்சாபி மாகாணம் கோருபவர்களும் இதில் சேரக் கூடும்" என்றும் தேஷ்பாண்டே கூறியிருக்கிருர்.

ஷேக் அப்துல்லாவின் பிரசங்கங்கள் அவர் தேசத் துரோகி என்பதைக் காட்டுகிறதென்றும், எனவே அவருக்கு டில்லியில் வரவேற்பு ஏற்பாடுகள் எதுவும் செய்யக் கூடாது என்றும் தேஷ்பாண்டே வற்புறுத்தியிருக்கிருர்.

# வங்கியில் திருட்டு முயற்சி தோல்வி

கொழும்பு, ஞாயிறு

மக்கள் வங்கியின் மினுவாங் கொடைக் கிளையைக் கொள்ளையடிக்க முயற்சிகள் செய்யப்பட்டதாக பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்குச் செய்தி கிடைத்திருக்கிறது.

ஜன்னலொன்றின் மூலமாக உள்ளே பிரவேசித்த திருடர் கூட்டம் ஒன்று மூன்றரைலட்சம் ரூபாயைத் திருடமுயன்று தோல்வியடைந்தது. சந்தேகத்தின் பேரில் இதுவரை நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸாரால் தேடப்படும் ஐந்தாவது நபரே இக் கூட்டத்தின் தலைவர் எனக் கருதப்படுகிறது. கைதுசெய்யப்பட்டவர்களனைவரும் நுகைகொட, பொரளஸ்கமுவப்பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.


சுத்தமான பால்



நெஸ்பிரே

நிலையான புதுமை
நிர்மலமான ரகம்
நிகரிலா சிக்கனம்

பலமானது,
நலமும் பலமும் அளிக்கும்
நல்ல சமதையான ஆகாரத்தின்
ஒரு அத்தாவசியமான
அங்கமாகத் திகழ்கின்றது.

குடும்பத்தினர் ஒவ்வொருவருக்கும்
நாளாந்தம் முழு ஆடைப்பாலைக்
கொடுத்து வாருங்கள்.

அதிமான பாலைப் பருகுங்கள்.....
முழு ஆடை நிரம்பிய நெஸ்பிரே
பவுடர் பாலை அருந்துங்கள்.




நெஸ்பிரே பாதுகாப்பான பால்



# "திரைப்பட கார்ப்பரேஷன் ஆரம்பிக்கப்படவேண்டும்"

## அரசாங்கத்துக்கு கமிஷன் சிபார்சு

கொழும்பு, ஞாயிறு

சினிமாப் படங்களின் இறக்குமதியையும், விநியோகத்தையும், அரசாங்கம் கையேற்க வேண்டுமென்று அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட சினிமாக் கமிஷன் சிபார்சு செய்துள்ளதாக தெரிய வருகிறது.

இந்த அறிக்கை விரைவில் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1961-ம் ஆண்டு ஜூன் மாதம் நியமிக்கப்பட்ட சினிமா கமிஷனில் திரு. ஜே. விக்ரமசிங்கி (தலைவர்), திரு. றெஜி சிறிவர்த்தன, திரு. பலிதாவீரமன் ஆகியோர் கடமையாற்றுகிறார்கள்.

கமிஷனால் சிபார்சு செய்யப்பட்ட மற்ற விஷயங்கள் பின்வருமாறு:

அரசாங்கத்தினால் திரைப்படகார்ப்பரேஷன் ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும். உள்நாட்டுத் தயாரிப்பாளர்களை ஊக்குவிக்கும் நோக்கமாக பெரிய சினிமா ஸ்ருடியோ ஒன்று கட்டப்பட வேண்டும். உள்நாட்டுத் தயாரிப்பாளர்கள், படம் பிடிப்பதற்கு வசதியாக எல்லா வசதிகளும் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சினிமாத்துறை அபிவிருத்தி அடைந்த நாடுகளிலிருந்து சினிமாப் படங்கள் இறக்குமதி செய்ய வேண்டும்.

உள்நாட்டுப் படங்கள் தயாரிப்பதில் அரசாங்க பிலிம் யூனிட்டை எப்படி உபயோகிக்கலாம் என்பதுபற்றியும் கமிஷனிடம் கேட்கப்பட்டுள்ளது. டைரக்டர்கள், கமராமேன்கள் நடிகர்-நடிகைகள், ஆகியோருக்கு தகுந்த பயிற்சியளிப்பதற்கு வேண்டிய வசதிகள் அளிப்பது பற்றியும், கமிஷனிடம் கேட்கப்பட்டுள்ளது.

தரம் குறைந்த சினிமாப் படங்களினால் கொலைக் குற்றங்கள் அதிகரிப்பதாகத் திரு மைத்திரிபால சேனநாயக்கா, அரசாங்கத்திற்குச் சுட்டிக் காட்டியுள்ளார்.

சினிமா கமிஷனின் சிபார்சுகள், அரசாங்கத்திடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டவுடன், உடனடியாக அமுல் நடத்துவதென கல்வி மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்லே தீர்மானித்துள்ளார்.

## வானொலிநிகழ்ச்சிகள்

### திங்கள் 27-4-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-55 கிறிஸ்தவசிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 தேர்ந்த இசை, 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை — கே. கனகசுந்தரம், 7-15 பாட்டு — நாகம்மா கதிர்காமர், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-30 செய்திக்கதம்பம், 8-45 இஸ்லாமியகீதங்கள், 9-15 தேர்ந்த இசை, 9-30 தமிழ் மூலம் சிங்களம் (மறு ஒலிபரப்பு), 9-45 வாத்திய இசை, 10-00 நேயர்விருப்பம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப்பாடல்கள் 7-30 திருக்கோயிலூர் — எஸ். புஷ்பா — பாட்டு, 8-15 செம்மங்குடி ஆர். ஸ்ரீநிவாசஐயர் — பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 கே. வாசுதேவன் — பாட்டு, 1-30 வாத்திய இசை, 1-50 கதம்பம், 2-10 திரு கோயிலூர் எஸ். புஷ்பா — பாட்டு, 2-40 பொன்னெளிர் பாரதம் — தொடர்நிகழ்ச்சி.

மாலை 5-15 திரைப்பட இசை, 5-45 இசைப்பயிற்சி

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 அருணகிரிநாதர் — இசைவிழா, 8-40 தேசபக்திப் பாடல்கள், 9-15 வெற்றி வாகை — தொடர்நிகழ்ச்சி, 9-30 சிறுதொழில் கார்ப்பரேஷன் — சித்திரம், 10-00 இசைக்கோவை.

## கிரிக்கெட் போட்டி

சுழிபுரம், ஞாயிறு

வழக்கம்பரை இளைஞர் கோஷ்டிக்கும் சண்டிலிப்பாய் இளைஞர் கோஷ்டிக்குமிடையே சிநேக பூர்வமாக நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் வழக்கம்பரை கோஷ்டியினர் வெற்றி பெற்றனர். போட்டி வழக்கம்பரை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

## பாட்மின்டன்கழக பரிசளிப்புவிழா

சுழிபுரம், ஞாயிறு

தொல்புரம் பாட்மின்டன் கழக பரிசளிப்புவிழா கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. கழகத் தலைவர் திரு. சி. ஞானசந்திரமூர்த்தி தலைமை வகித்தார். தலைவர் தமது தலைமையுரையில்பேசுகையில் கூறியதாவது:

"எமது மத்தியிலுள்ள விளையாட்டுவீரர்கள் எவ்விளையாட்டில் பங்குபற்றினாலும் எப்படியாலும் பரிசுபெற வேண்டும், வெற்றியடைய வேண்டும் என்ற நோக்குடன் தான் பங்கு கொள்கின்றார்கள். ஆனால் உண்மையுடன் சட்டதிட்டக் கட்டுப்பாட்டுடன் நடந்து தோல்வியடைபவனே உண்மையான வீரனாகும். உடல் பயிற்சிமூலம் நல்ல பிரஜைகளாக வாழ எமது வாலிபர் முன்வர வேண்டும்."

இவ்விழாவில் பிரதம விருந்தினராக டாக்டர் சி. செல்லத்துரைகலந்து கொண்டார். போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு டாக்டர் சி. செல்லத்துரை பரிசுகளை வழங்கினார். திரு. சி. சுந்தையா, பொ. செல்வரத்தினம் உட்பட மற்றும்பலர் பேசினர்.

போட்டியில் வெற்றிபெற்றவர்கள் விபரம்: தனி ஆட்டம்: எஸ். அமிர்தலிங்கம், கே. இந்திரன்.

சோடிஆட்டம்: எஸ். நாகராசா - எஸ். அமிர்தலிங்கம். கே. இராமச்சந்திரன் - எஸ். தர்மராசா.

## கென்னடி கோஷ்டி வெற்றி

சுழிபுரம், ஞாயிறு

தொல்புரம் கென்னடி கோஷ்டிக்கும் பொன்னாலை-நெல்லியான் சூரியப்பிரகாச கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற தாச்சிப்போட்டியில் கென்னடி கோஷ்டியினர் மேலதிக மூன்று பழங்களைப்பெற்று வெற்றிபெற்றனர். வழக்கம்பரை சனசமூகநிலையத்தினரால் நடாத்தப்படும் சுற்றுப் போட்டியில் தொடர்ந்து தோல்வியைப் பெற்றுவந்த கென்னடி கோஷ்டி நான்காவது கோஷ்டியுடன் மோதி வெற்றிபெற்றது. போட்டி வழக்கம்பரை சனசமூக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. போட்டி முடிவின்படி கென்னடி கோஷ்டி 14 பழங்களையும் பொன்னாலை—நெல்லியான் கோஷ்டி 11பழங்களையும் பெற்றன. போட்டி மத்தியஸ்தராக க. வாமதேவன் கடமையாற்றினார்.

# மிருசுவில், கோப்பாய், குடத்தனை கி. ச. தேர்தல் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மிருசுவில் கிராமச் சபைக்கு நடைபெற்ற தேர்தலில் 5ம் வட்டாரத்தில் போட்டியிட்ட நடராசா-சின்னத்தம்பிக்கும், கனகசபை-சரவணமுத்துவிற்கும், தலா 29 வாக்குகள் கிடைத்ததைத் தொடர்ந்து அதிர்ஷ்டச்சீட்டு போடப்பட்டது. இதில் என். சின்னத்தம்பி வெற்றி பெற்றார். மூன்றும் நான்காம் வட்டாரங்களில் அங்கத்தவர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்கள். வெற்றி பெற்றோர் விபரம் பின் வருமாறு:-

1-ம் வட்டாரம்: எஸ். ஐயம்பிள்ளை.

2-ம் வட்டாரம்: வி. அம்பலவாணர்.

5-ம் வட்டாரம்: என். நடராசா.

6-ம் வட்டாரம்: எஸ். வேலுப்பிள்ளை.

7-ம் வட்டாரம்: கே. குலசேகரம்பிள்ளை.

8-ம் வட்டாரம்: கே. வீரகத்தி.

9-ம் வட்டாரம்: வி. பொன்னையா.

10-ம் வட்டாரம்: வி. இராசரத்தினம்.

11-ம் வட்டாரம்: பி. சின்னத்தம்பி.

### குடத்தனை

குடத்தனை கிராமச் சபைக்கு 1-ம், 5-ம், 7-ம் வட்டாரங்களில் அங்கத்தவர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்கள். வெற்றி பெற்றோர் விபரம்:

2-ம் வட்டாரம்: என். ஜே. மரியாம்பிள்ளை.

3-ம் வட்டாரம்: வி. வயிரவப்பிள்ளை.

4-ம் வட்டாரம்: வி. இராசு.

6-ம் வட்டாரம்: எஸ். சிதம்பரம்பிள்ளை.

8-ம் வட்டாரம்: கே. சிவப்பிரகாசம்.

9-ம் வட்டாரம்: கே. கே. சிவசாமி.

### கோப்பாய்

கோப்பாய் கிராம சபைத் தேர்தலில் 6-ம், 8-ம் வட்டாரங்களுக்கு அங்கத்தவர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்கள். தற்போதைய தலைவர் திரு. பி. திருஞானசம்பந்தர் 4-ம் வட்டாரத்தில் வெற்றி பெற்றார். வெற்றி பெற்றோர் விபரம்:

1-ம் வட்டாரம்: கே. அப்பாப்பிள்ளை.

2-ம் வட்டாரம்: கே. தர்மலிங்கம்.

3-ம் வட்டாரம்: கே. ராஜலிங்கம்.

4-ம் வட்டாரம்: பி. திருஞானசம்பந்தர்.

5-ம் வட்டாரம்: ஏ. உலகநாதன்.

7-ம் வட்டாரம்: எஸ். நவரத்தினம்.

9-ம் வட்டாாம்: என். அருளம்பலம்.


### மிருசுவில் கிராமசபை கேள்விப்பத்திர விளம்பரம்

மிருசுவில் கிராமசபையால் "கரம்பகம் வேதக்கால் ரோட்" வேலைக்குக் கேள்வி விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. மேற்படி வேலைக்கு 9-5-64 சனிக்கிழமை காலை 9-00 மணிவரை கேள்வி விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கட்டுக்காசு ரூபா 50/- -ம் (ஐம்பது) பத்திரப்பணம் ரூபா 10/- -ம் (பத்து) கட்டியதன் பெயரில் 7-5-64 வியாழக்கிழமை காலை 9-00 மணியில் இருந்து பகல் 12-00 மணிவரை கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம். பத்தாயிரம் ரூபாவிற்குக் குறையாத பதிவுபெற்ற தகுதியான ஒப்பந்தகாரர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். ஏனைய விபரங்கள் வடபகுதி உள்ளூர் ஆட்சி அதிபர் காரியாலயத்திலும் மிருசுவில் கிராமசபைக்காரியாலயத்திலும் கந்தோர் நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

இங்ஙனம்
A. D. பொன்னுக்கோன்
அக்கிராசனர்
339 மிருசுவில் கிராமசபை.


## "போட்டி பூசல்கள் அதிகரித்துவிட்டன"

சுழிபுரம், ஞாயிறு

பண்ணைகம் தெற்கு கிராம முன்னேற்றச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில் முன்றலில் நடைபெற்றது. சங்கத் தலைவர் திரு வி. ஆறுமுகம் தமது தலைமையுரையில் பேசுகையில், இன்று சங்கங்கள் என்று பெயரளவில் விளங்கினாலும் உண்மையில் அங்கு போட்டி பூசல்கள் மற்றும் ஒருசிலரின் உழைப்பும் தான் காணமுடிகின்றதென்றும் கிராம முன்னேற்றத்துக்கு எல்லோரும் உழைப்பதிலும் பார்க்கத் தமது முன்னேற்றமே மிகவும் முக்கியமெனச் சிலர் கருதுகிறார்களென்றும் இவர்கள் கிராமத்தின் அதிமுக்கிய தேவைகளை எப்படிப் பெற வேண்டுமென்பதை மறந்து அயலவனுக்குத் தீங்கு செய்வதில் காலத்தை வீணே செலவுசெய்கின்றனர் என்றும் கூறினார்.

சங்க அறிக்கைகள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து க. தம்பிஐயினார், இ. பாக்கியநாதன் உட்பட மற்றும் பலர் பேசினர். நடப்புவருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: வ. ஆறுமுகம், உபதலைவர்: செ. சீனிவாசகம், காரியதரிசி: க. தம்பிஐயினார், உபகாரியதரிசி: மா. பரமகுரு, தனாதிகாரி: பொ. ஜெகநாதன்.

காங்கேசன்துறை

# பட்டினசபைக் காரியதரிசி விரைவில் நியமிக்கப்படுவார்

காங்கேசன் துறை, ஞாயிறு

காங்கேசன் துறை பட்டின சபைத் தலைவர் திரு. மு. திடவீரசிங்கம், காங்கேசன் துறை பட்டினசபைக்கு அனுப்பப்பட்ட காரியதரிசிக்குத் தமிழ் தெரியாத காரணத்தினால் அவரை ஏற்க மறுத்ததைத் தொடர்ந்து 4 மாத காலமாகக் காரியதரிசி இல்லாமல் இயங்கிவந்த பட்டினசபையில் தமிழறிவுள்ள காரியதரிசி ஒருவர் நியமிக்கப்படவேண்டுமென்பது சம்பந்தமாக ஸ்தலஸ்தாபனக் கமிஷனருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை பலனளித்துள்ளதாகத் தெரிகிறது.

ஸ்தலஸ்தாபனக் கமிஷனருடன் திரு. திடவீரசிங்கம் சென்ற செவ்வாய்க்கிழமை நடத்திய பேச்சுவார்த்தையின் போது மிக விரைவில் பட்டினசபைக்குக் காரியதரிசி அனுப்பிவைப்பதாகக் கமிஷனர் ஒப்புக்கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.

இப்பேச்சுவார்த்தையின் போது வேறு சில விஷயங்களும் இடம்பெற்றதாகவும் 4 மாத காலமாகக் காலியாக இருக்கும் லிகிதர் ஸ்தானத்துக்கு ஒரு லிகிதர் அடுத்த மாதம் 2-ம் திகதி அனுப்புவதாகக் கமிஷனர் தெரிவித்துள்ளதாகவும் நம்பப்படுகின்றது.


புன்னகை பூத்திருங்கள்!




கழுவக்கூடிய சூப்பர் குயிங்க் ரோயல் புளூ மை கொட்டுண்ட புடவைகளையும் துணிமணிகளையும் பொறுத்து கவலையே கொள்ளாதீர்கள். ஏனெனில் இந்த மை தான் பாடசாலைக்கும் வீட்டுப் பாவனைக்கும் உகந்த மை. காரணம் மை பட்ட உடைகளைக் கழுவி அலசியதும் கறைகள் மாயமாய் மறைந்து விடுகின்றன.

இது ஒரு
பார்க்கர் பேனா
கம்பனியின் உற்பத்தி
உலகினரால் அதிகமாக நாடும் பேனைகளைத் தயாரிக்கும் ஸ்தாபனத்தினர்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

EY 5350 Jawa 2. 5, நல்ல நிலைமையிலுள்ள மோட்டார் சயிக்கிள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு றேடியோ லைன்ஸ், 13, யுபிலி பசார் (ராணிதியேட்டருக்கு அருகாமை) மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். 256

### விற்பனைக்கு

கரணவாய் தெற்கு முதலைக்குளம் முருகையன் கோயிலுக்கு அருகாமையில் 18 1/2 பரப்பு வளவு வீட்டுடன் உடனே விற்பனைக்குண்டு. அ. சுந்தரம், மூளாய். 247

### விற்பனைக்கு

45, ஸ்ரீ வெங்கிடேசன் வீதியிலுள்ள 1 பரப்பு காணி கல் வீட்டுடன் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்க: A. K. முருகேசு, 51, மலிச்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 258

### காணி விற்பனைக்கு

வண்ணார்பண்ணை - யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கருகாமையில் 5 பரப்புக் காணி- விபரங்களுக்கு: பூ. வ. மகாதேவா, நம். 3, அரசாங்க பங்களா, டல் பிளேஸ், கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3. 263

### தேவை

இணுவில் ஸ்ரீ கணேசா ஸ்ரோருக்கு வியாபார அனுபவமும் கணக்கு அனுபவமும் உடைய நிசீற் உதவியாளர் உடனடியாகத் தேவை. சேவைத் தகைமை குறித்து விண்ணப்பிக்குக. 45 வயதுக்குட்பட்டோர் விரும்பப்படுவர். 264

### Important Announcement Secretarial and Accountancy Tutory

1. The above institute also provides tuition for Intermediate Examination of the Institute of Bankers to be held in September.

2. Applications for all courses inclusive of the Intermediate of Cost and Works Accountants and Chaartered Secr etaries will be finalised before 30th instant.

3. Failing accomodation in the morning or After-noon Sessions, accomodation can be provided in the evening courses which will be from 5 — 7 p. m.

4. The composite fees per month for Secretaries Intermediate is Rs 50/-, for cost and Works Rs 60/- and for Banking Rs. 40/-. The fees per supject is Rs. 15/-.

Contact Registrar: Kumaraswamy Buildings, Opposite Bus Stand, Power-House Road, Grand Bazaar, Jaffna. 257

# சீனு செல்லும் இலங்கை மாதர்கள்

## மே தின நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வர்

கொழும்பு, ஞாயிறு
மக்கள் சீனுவில் நடைபெறும் மேதின நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் பொருட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் மூன்று மாதர்களையும் 2தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் அனுப்புவதென்று பிரதமர் முடிவு செய்துள்ளார்.

இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் இத்தீர்மானத்திற்கிணங்க நிதிமந்திரி திரு. டி. பி. இலங்கரத்தினவின் மனைவி திருமதி தமரகுமாரி இலங்கரத்தின, தபாலமைச்சரின் மனைவி திருமதி எம். பி. டி' செற்சிறிவர்த்தன, செல்வி கமலா பியட்ரிஸ் ரணதுங்கா ஆகியோர் சீனு செல்வார்கள் தொழிற்சங்கப் பிரதிநிதிகளான திரு. கே. எச். சில்வா, திரு சி. ஏ. டி. பொன்சேகா ஆகியோரும் சீனு செல்வார்கள்.

ஹங்கேரியில் நடைபெறவிருக்கும் மேதின நிகழ்ச்சிகளில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கலந்து கொள்ள வருமாறு திரு. ஜே. ஏ. கே. (ஜக்) பெரேரா அழைக்கப்பட்டுள்ளார்.

திரு. பெரேராவுக்கு ஹங்கேரி தொழிற்சங்கங்களின் மத்திய சபையிடமிருந்து இந்த அழைப்பு வந்துள்ளது. ஹங்கேரிக்கு நாளை புறப்படும் திரு பெரேரா மேதின நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்வார்.

---

### போஸ்ட்மாஸ்டர் ரயிலுடன் மோதுண்டார்

காங்கேசன்துறை, ஞாயிறு
காங்கேசன்துறை போஸ்ட்மாஸ்டர் ரயிலுடன் மோதுண்டு காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் செலுத்திச்சென்ற சைக்கிள் சேதத்துக்குள்ளானது.

காங்கேசன்துறை சுங்கப் பகுதிக்கும் ரயில் நிலையத்திற்கும் இடையேயுள்ள ரயில் பாதை எந்தவித பாதுகாப்புமின்றி இருக்கிறது. இந்த இடத்தில்தான் போஸ்ட் மாஸ்டர் விபத்துக்குள்ளானார். ஒருவித பாதுகாப்புமில்லாத இந்த ரயில் பாதையில் ஏற்கனவே பல விபத்துக்கள் நிகழ்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

---

### காரினுல் மோதுண்டு ஆஸ்பத்திரியில் அனுமதி

காங்கேசன்துறை, ஞாயிறு
பலாலி அம்மன் கோவிலில் கோலாட்டம் அடிக்கச்சென்ற மகாலிங்கம் என்பவர் சைக்கிளில் சென்ற போது காரினுல் மோதுண்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதுசம்பந்தமாக தெல்லிப்பழையைச் சேர்ந்த பூதப்பிள்ளை பிணையில் விடுதலைசெய்யப்பட்டுள்ளார்.


**REGAL — JAFFNA**
**NOW SHOWING**
Daily 3 Shows Sats.&Suns. Four
PETER SELLERS
in
**TRIAL and ERROR**
From 1-5-64
**TOKYO by NIGHT**


### மற்றுமொரு மொழி வழக்கு

கொழும்பு ஞாயிறு
அரசாங்கத்தின் சிங்களம் மட்டும் சட்டம் அமுல் சம்பந்தமாக இன்னுமொரு அரசாங்க உத்தியோகஸ்தர் அரசாங்கத்துக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய அறிவித்தல் கொடுத்துள்ளார்.

திறைசேரியைச் சேர்ந்த விசாரணை உத்தியோகஸ்தரும் தற்போது திறைசேரியில் பதில் உதவி விநியோக கட்டுப்பாட்டதிகாரியாகக் கடமையாற்றுபவருமான திரு. ரி. தியாகராஜா சிங்களத்தில் தேர்ச்சியடையவில்லை என்பதற்காக அவருக்கு கட்டாய ஓய்வு அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது. தனது கட்டாய ஓய்வை நிறுத்துமாறு திறைசேரியின் உதவிக்காரியதரிசி திரு. திலக்குணவர்த்தனவுக்கு தனது வழக்கறிஞர் மூலம் திரு. தியாகராஜா அறிவித்தல் கொடுத்துள்ளார்.

## செய்திச்சுருக்கம்

### 6 மைல் நீள பாதை

கட்டுவன் என்ற இடத்திலிருந்து உறுபொக்க என்ற இடத்துக்குச் செல்லும் ஆறு மைல் நீளமான பாதை தற்பொழுது முடியும் கட்டத்தில் இருக்கிறது. தேசிய சேவைகள் திட்டத்தின் கீழ் இப்பாதை அமைக்கப்படுகிறது. பாதை அமைப்பு வேலைகளை 24,000-க்கும் அதிகமான சிரமதானத் தொண்டர்கள் கவனித்து வருகின்றனர்.

### பஸ்மோதி மூதாட்டி மரணம்

கண்டியில் இ. போ. ச. பஸ் ஒன்று மூதாட்டியொருவரை மோதியதில் அவர் ஸ்தலத்திலேயே மரணமானுர்.

### ஒரு சதம் லாபம்; ரூ. 500 நஷ்டம்

புறக்கோட்டையிலுள்ள ஒரு ஹோட்டலைச் சேர்ந்த பி. பொன்னுத்துரை என்பவர் கட்டுப்பாட்டு விலையிலும் ஒரு சதம் கூடுதலாக தீப்பெட்டியை விற்பனை செய்த குற்றத்துக்காக கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் திரு. டி. கியு. எம். சிறிமன்னே ரூ. 500 அபராதம் விதித்துள்ளார்.

### சைக்கிள் டயர் ரூ. 22!

சிறிது காலத்துக்கு முன்னர் ஒன்பது ரூபாவுக்கு விற்பனையான சைக்கிள் டயர் தற்பொழுது உடுநுவர பகுதியில் 22 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

### தற்காலிக பதவி நீக்கம்

ஊர்காவற்றுறைப் பட்டின சபை ரெவனியூகுமாஸ்தாவான திரு. கே. கைலாசபிள்ளை தற்காலிகமாக பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பொன்னுத்துரை என்பவர் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபொழுது காரினுல் மோதப்பட்டதன் விளைவாக அவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மரணமானுர்.

---

### கார்—சைக்கிள் மோதல்

காங்கேசன்துறை, ஞாயிறு
மாவிட்டபுரத்தில்சைக்கிளில் சென்ற செல்லத்துரை என்பவர் காரொன்றினுல் மோதுண்டு காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தையிட்டியைச் சேர்ந்த ச. மயில்வாகனம் என்பவர் செலுத்திய கார்தான் இவரை மோதியதென்றும், விபத்து ஏற்பட்டதைத்தொடர்ந்து தமது காரில் அவர் உடன் சென்றுவிட்டாரென்றும் சொல்லப்படுகிறது.

சந்தேக நபரான மயில்வாகனம் தமது காரில் நோயாளி ஒருவரை காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்த சமயம் பொலிஸ் சார்ஜண்ட் திரு. க. முத்துக்கிருஷ்ணனினுல் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

### தமிழ் படத்துக்கு ஜனுதிபதியின் வெள்ளிப் பதக்கம்

புதுடில்லி, ஏப்ரல் 26
1963-ம் ஆண்டுக்கான சிறந்த திரைப்படங்களுக்கான அரசாங்க விருதுகளை ஜனுதிபதி ராதாகிருஷ்ணன் நேற்று வழங்கினுர்.

மிகக்குறைந்த முழுநீளப் படத்திற்கான ஜனுதிபதியின் தங்கப்பதக்கம் ஹிந்திப் படம் ஒன்றுக்கும்; அகில பாரத பாராட்டுப் பத்திரம் ஒரு தெலுங்குப் படத்திற்கும், மூன்ரும்பரிசு ஒரு வங்காளப்படத்திற்கும் கிடைத்தது.

"நானும் ஒரு பெண்" என்ற தமிழ்ப்படத்திற்கு பிராந்தியப் பரிசு (ஜனுதிபதியின் வெள்ளிப் பதக்கம்) கிடைத்தது.

"பனியின் இசை" என்ற செய்திப்படத்திற்கும், "ஹிந்து மகா சமுத்திர ஆராய்ச்சி" என்ற ஆராய்ச்சிப் படத்திற்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

---

### கூட்டு சேர்வதை தடுக்க நடவடிக்கை

கொழும்பு, ஞாயிறு
லங்கா சமசமாஜக்கட்சியின் மத்தியகமிட்டியைச் சேர்ந்த பதினைறு இடதுசாரி அங்கத்தவர்கள் எல்லாக் கட்சி அங்கத்தவர்களுக்கும் அனுப்பியுள்ள கடிதத்தில் வலதுசாரி என். எம். கோஷ்டியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள்.

அக்கடிதத்தில் திருமதி பண்டாரநாயக்காவின் முதலாளித்துவ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் என். எம். பெரேரா கோஷ்டி கூட்டு சேர்வதைத் தடை செய்வதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தில் பின் வருவோர் கையெழுத்திட்டுள்ளார்கள்: திருவாளர்கள் எட்மண்ட் சமரக்கொடி, மெரில் பெர்னுண்டோ, வி. காராளசிங்கம், சிட்னி வனசிங்கா, ஆர். எஸ். பகவான், பிரின்ஸ் ஜயசூரிய, டி. எஸ். மல்லவராச்சி, பி. பி. தம்பு, பாலிஸ் சேரசிங்க, ரெஜினல்ட் மென்டிஸ், எஸ். ஏ. மார்டினஸ், ரீ. எஸ். புஷ்பராசன், டபிள்யு. டீ. தர்மசேன.

### புதிய டாக்டர்களுக்கு தங்க இடமில்லை!

கொழும்பு, ஞாயிறு
அண்மையில் சித்தியெய்திய பின் நாட்டில் பல்வேறு ஆஸ்பத்திரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ள 9% டாக்டர்களில், அநேகர் தங்குவதற்குத் தகுந்த விடில்லாமல் கஷ்டப்படுகிருர்கள்.

இவர்களில் பலர் தங்களின் நிலைமையை விளக்கி, மேலிடத்துக்கு அறிவித்துள்ளார்கள். கண்டி ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்ட ஒரு டாக்டருக்கு, எந்தவிதமான தளபாடங்களும் வழங்கப்படாததால் மிகவும் கஷ்டமடைந்துள்ளார்.

---

### அழகு சுப்பிரமணியத்தின் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், திங்கள்
பிரபல எழுத்தாளர் திரு. அழகு சுப்பிரமணியத்தின் 'பெரிய பெண்' (தி பிக் கேர்ல்) எனும் சிறுகதைத் தொகுப்பின் வெளியீட்டுவிழா இன்று மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்க தகவல் நிலயத்தில் நடைபெறும்.

பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு பி. ரொபேர்ட் சில்வா விழாவுக்குத் தலைமை தாங்குவார்.

### அமெரிக்காவில் டாக்டர் ராகவன்

வாஷிங்டன், மார்ச் 26
சென்னைப் பல்கலைக்கழக சமஸ்கிருதப் பேராசிரியர் டாக்டர் வி. ராகவன் இங்கு வந்து சேர்ந்துள்ளார். யு.எஸ். வெளிவிவகார இலகாவின் பண்பாட்டுப் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் வந்துள்ள அவர் இரண்டு மாத காலம் சுற்றுப் பிரயாணம் செய்து அமெரிக்காவிலுள்ள இந்தியப் படிப்பு நிலயங்களைப் பார்வையிடுவார்.

---

### திறப்புவிழா

காங்கேசன்துறை, ஞாயிறு
காங்கேசன்துறையில் புதிதாக நிறுவப்பட்ட ராஜநாயகி தியேட்டரை காங்கேசன்துறை பட்டினசபைத் தலைவர் திரு. மு. திடவீரசிங்கம் கடந்த வெள்ளிக்கிழமை திறந்துவைத்தார். அப்பொழுது அவர் உரை நிகழ்த்துகையில், இப்பகுதியில் வாழும் தமிழ் மக்கள் சிறந்த முறையில் பொழுது போக்குவதற்கு நவீன முறையில் இத்தியேட்டர் அமைக்கப்பட்டிருக்கிறதென்றும் இதை நிறுவுவதில் போதிய கவனமெடுத்த உரிமையாளர்களுக்கு பாராட்டுதல்களைத் தெரிவிக்கிறேன் என்றும் கூறினுர்.

---

### அமெரிக்கஜனுதிபதி-இந்திரா சந்திப்பு

வாஷிங்டன், ஏப். 26
ஸ்ரீமதி இந்திராகாந்தி நாளை அமெரிக்க ஜனுதிபதி ஜோன்ஸனைச் சந்திக்கவிருக்கிருர். பிரதமர் நேருவின் கடிதம் ஒன்றை அவர் ஜனுதிபதியிடம் சமர்ப்பிப்பார். கடிதத்திலுள்ள விஷயம் என்னவென்பது தெரியவில்லையாயினும், சீனு, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் இந்தியாவுக்குள்ள பிரச்னைபற்றி இக் கடிதம் குறிப்பிடுவதாகக் கூறப்படுகிறது.

சர்வதேச உறவை மேம்படுத்த திரு. ஜோன்ஸன் மேற்கொண்டிருக்கும் முயற்சிகளை திரு. நேரு பாராட்டியிருக்கிருர்.

---

### 4 பொலிஸ் உத்தியோகஸ்தர் தற்காலிக பதவி நீக்கம்

கொழும்பு, ஞாயிறு
தென்மாகாண பொலிஸ் பகுதியைச் சேர்ந்த ஒரு உதவி பொலிஸ் சுப்பிரிண்டன், இரு பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள், ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோரை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. எஸ். ஏ. திஸநாயக்கா தற்காலிகமாகப் பதவி நீக்கம் செய்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற சிங்களத் தகுதி பரீட்சையின் போது இவர்கள் ஆள்மாருட்டம் செய்தனர் என்று கூறப்படுகிறது. பரீட்சையின்போது தங்களுக்குப் பதிலாக அவர்கள் வேறு நபர்களைப் பரீட்சை யெழுதவிட்டனர் என்று சொல்லப்படுகிறது. தற்காலிகமாகப் பதவி நீக்கம் செய்யப்பட்ட இவர்கள் சிங்களவர்களல்லாதவர்களே.

---

### தந்தியின் நத்தை வேகம்!

ஹப்புத்தளை என்ற இடத்திலிருந்து ஏழு மைல்தூரமுள்ள பண்டாரவளையிலுள்ள ஒருவருக்கு அனுப்பப்பட்ட தந்தி 30 மணித்தியாலங்களுக்குப் பின்னர் குறிப்பிட்ட நபருக்குக் கிடைத்துள்ளது.


**வாடகைக்கு வீடு**
பிறவுண் வீதியில் குழாய்த் தண்ணீர் இணைத்த கக்கூஸ், குளியலறையுடன் வசதியான வீடு வாடகைக்குள்ளது. விசாரணை நீராவியடி பிறவுண் வீதி 21-ம் இலக்க இல்லத்தில். 265



**வெற்றிகரமான 5வது வாரம்!**
**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
**விஜயா** (மட்டக்களப்பு) **ஸ்ரீ கிருஷ்ணு** (திருகோணமலை) **விஜிதா** (ஹட்டன்)



எம். ஜி. ராமசசந்திரன்—பி. சரோஜாதேவி
நடித்த
**பெரிய இடத்துப் பெண்**

**3வது வெற்றிகரமான வாரம்!**
**மைலன்** (கொழும்பு) **நவா** (கொம்பனித் தெரு)
மற்றும் 5 திரைகளில்
எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி
புஷ்பலதா — கருணுநிதி
நடித்த
**பணம் பந்தியிலே**


இப்பத்திரிகை ஈழநாடு, லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.